# 088/2026-T

Question Booklet Alpha Code **A**

Question Booklet Serial Number

Total No. of questions : 100

Time : 1 Hour 30 Minutes

Maximum : 100 Marks

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is un-numbered, please get it replaced by new question booklet with same alpha code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet, until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball-Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

# 088/2026-T

Maximum : 100 marks

Time : 1 hour and 30 minutes

1. மகாத்மா காந்தி மற்றும் ஸ்ரீ நாராயண குரு ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு குறித்த சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும் :

   (i) இருவரும் 1925 மார்ச் 12 அன்று சந்தித்தனர்

   (ii) இச்சந்திப்பு குருவாயூர் சத்தியாகிரகம் தொடர்பானதாக இருந்தது

   (iii) அவர்கள் வர்கலாவில் உள்ள சிவகிரி மடத்திற்கு அருகிலுள்ள வனஜாக்ஷி மந்திரத்தில் சந்தித்தனர்

   (iv) காந்திஜியின் கேரளாவிற்கான முதல் பயணத்தின் ஒரு பகுதியாக இச்சந்திப்பு நடைபெற்றது

   (A) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

   (B) (i) மற்றும் (iii) ஆகியவை சரியானவை

   (C) (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

   (D) (i) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

2. 'தி சோஷியல் கான்ட்ராக்ட்' என்ற நூலை எழுதிய பிரெஞ்சு சிந்தனையாளர் யார்?

   (A) மாண்டெஸ்கியூ    (B) ரூசோ

   (C) வால்டேர்    (D) டால்ஸ்டாய்

3. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் செயல்படுத்தப்பட்ட நில வருவாய் முறைகள் குறித்த தவறான கூற்றுகளைக் கண்டறியவும்:

   (i) நிரந்தர நிலவரித் திட்டம் லார்ட் கார்ன்வாலிஸால் செயல்படுத்தப்பட்டது

   (ii) மகல்வாரி முறையில், விவசாயிகளிடமிருந்து நேரடியாக வரி வசூலிக்கப்பட்டது

   (iii) ரயத்வாரி முறை தென்னிந்தியாவில் செயல்படுத்தப்பட்டது

   (iv) நிரந்தர நிலவரித் திட்டம் தக்காணப் பகுதியில் செயல்படுத்தப்பட்டது

   (A) (ii) மற்றும் (iv) ஆகியவை தவறானவை

   (B) அனைத்தும் தவறானவை

   (C) (ii) மற்றும் (iii) ஆகியவை தவறானவை

   (D) (i) மற்றும் (iii) ஆகியவை தவறானவை

4. யுனெஸ்கோ அமைப்பால் 'இலக்கிய நகரம்' என அறிவிக்கப்பட்ட இந்திய நகரம் எது?

   (A) கோட்டயம்    (B) கொல்கத்தா

   (C) கோழிக்கோடு    (D) டெல்லி

5. பி. குன்ஹிராமன் நாயரின் 'புரளி மலையிலே பூமரங்கள்' என்ற கவிதையில் எந்த வரலாற்று நாயகனின் போராட்டம் சித்தரிக்கப்பட்டுள்ளது?

   (A) வேலுத்தம்பி தளவா    (B) ராம நம்பி

   (C) பழஸ்ஸி ராஜா    (D) மார்த்தாண்ட வர்மா

6. கேரளாவின் முதல் அமைச்சரவையில் இடம்பெற்ற அமைச்சர்கள் மற்றும் அவர்களின் துறைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. சரியான இணைகளைத் தேர்ந்தெடுக்கவும் :

(i) ஜோசப் முண்டச்சேரி : கல்வி

(ii) கே.ஆர். கௌரி அம்மா : நிதி

(iii) சி. அச்சுத மேனன் : சுகாதாரம்

(iv) வி.ஆர். கிருஷ்ண ஐயர் : சட்டம்

(A) அனைத்தும் சரி
(B) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
(C) (i) மற்றும் (iv) ஆகியவை சரி
(D) (iii) மற்றும் (iv) ஆகியவை சரி

7. கீழ்கண்டவற்றை பொருத்துக :

| | |
|---|---|
| (a) இமாச்சல இமயமலை | (i) தால் ஏரி |
| (b) உத்தராகண்ட் இமயமலை | (ii) மணிகரன் |
| (c) பூர்வாஞ்சல் | (iii) நைனிடால் |
| (d) காஷ்மீர் இமயமலை | (iv) லோக்தக் ஏரி |

(A) (a)-(ii) (b)-(iii) (c)-(iv) (d)-(i)
(B) (a)-(iii) (b)-(ii) (c)-(iv) (d)-(i)
(C) (a)-(i) (b)-(ii) (c)-(iii) (d)-(iv)
(D) (a)-(ii) (b)-(iv) (c)-(iii) (d)-(i)

8. பின்வருவனவற்றுள் எது அழிவை ஏற்படுத்தும் நிலநடுக்க அலை ஆகும்?

(A) முதன்மை அலை
(B) துணை அலை
(C) மேற்பரப்பு அலை
(D) இவற்றில் எதுவுமில்லை

9. இந்தியத் தட்டு மற்றும் யூரேசியத் தட்டு ஆகியவற்றிற்கு இடையிலான நகர்வு, எந்த வகையான தட்டு நகர்விற்கு உதாரணமாகும்?

(A) ஒன்றை விட்டு ஒன்று விலகிச் செல்லுதல்
(B) ஒன்றை நோக்கி ஒன்று நகர்தல்
(C) ஒன்றையொன்று கடந்து பக்கவாட்டில் நகர்தல்
(D) நகர்வு இல்லை

10. குறிப்பு 1 : இக்கடற்கரைச் சமவெளி ஒரு மூழ்கிய கடற்கரைச் சமவெளியாகும்.

குறிப்பு 2 : இது அரபிக்கடலுக்கும் தீபகற்ப இந்தியப் பீடபூமிக்கும் இடையில் அமைந்துள்ளது.

இக்குறிப்புகளால் விவரிக்கப்படும் கடற்கரைச் சமவெளி எங்கு பரவியுள்ளது?

(A) ரான் ஆஃப் கட்ச் மற்றும் கன்னியாகுமரிக்கு இடையே
(B) ரான் ஆஃப் கட்ச் மற்றும் மங்களூருக்கு இடையே
(C) மகாநதி டெல்டா மற்றும் கன்னியாகுமரிக்கு இடையே
(D) கிருஷ்ணா டெல்டா மற்றும் கன்னியாகுமரிக்கு இடையே

11. கண்ணூர் மற்றும் இடுக்கி மாவட்டங்களின் செங்கல் நிறைந்த மலைப்பகுதிகளில், நிலம் தாழ்ந்து போவதால் ஏற்படும் 'சிங்க்ஹோல்' (நிலக்குழி) உருவாக்கத்திற்குக் காரணமான நிகழ்வு எது?

(A) மண் குழாய் உருவாக்கம்
(B) நிலச்சரிவு
(C) பாறை சரிவு
(D) படிதல்

12. மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வெப்பநிலையில் ஏற்படும் அசாதாரணமான உயர்வை விவரிக்கும் நிகழ்வு எது?

(A) கடல் நீரோட்டம்
(B) பருவமழை
(C) எல் நினோ
(D) லா நினா

13. 'நிதி ஆயோக்'-இன் தலைவராகப் பதவி வகிப்பவர் யார்?

(A) பிரதம அமைச்சர்
(B) குடியரசுத் தலைவர்
(C) நிதி அமைச்சர்
(D) துணைக் குடியரசுத் தலைவர்

14. 'செல்வக் கசிவுக் கோட்பாட்டை' முன்வைத்த இந்தியப் பொருளாதார நிபுணர் யார்?

(A) ஜவஹர்லால் நேரு
(B) அமர்த்தியா சென்
(C) தாதாபாய் நௌரோஜி
(D) மன்மோகன் சிங்

15. நபார்டு (NABARD) எந்த ஆண்டில் நிறுவப்பட்டது?

(A) 1980
(B) 1982
(C) 1984
(D) 1986

16. பின்வரும் கூற்றுகளில் எது 'இந்திய ரிசர்வ் வங்கி' தொடர்பானதாகும்?

(i) 1935-இல் நிறுவப்பட்டது
(ii) கடன் உருவாக்கும் அமைப்பாக அறியப்படுகிறது
(iii) 'வங்கிகளின் வங்கி' என்று அறியப்படுகிறது
(iv) 'அந்நியச் செலாவணியின் பாதுகாவலர்' என்று அறியப்படுகிறது

(A) (i) மற்றும் (ii) மட்டும்
(B) (i), (ii) மற்றும் (iii) மட்டும்
(C) (i), (iii) மற்றும் (iv) மட்டும்
(D) மேற்கூறிய அனைத்தும்

17. முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) தொழில்துறை வளர்ச்சியை வலியுறுத்தியது

(ii) வேளாண்துறையின் வளர்ச்சியே முதன்மை நோக்கமாக இருந்தது

(iii) 1950-55 காலகட்டத்தில் செயல்படுத்தப்பட்டது

(iv) இதன் காலம் 1951 முதல் 1956 வரை இருந்தது

(A) (i) மற்றும் (ii) மட்டும்
(B) (ii) மற்றும் (iv) மட்டும்
(C) (ii), (iii) மற்றும் (iv) மட்டும்
(D) மேற்கூறிய அனைத்தும்

18. தற்போதைய ரிசர்வ் வங்கி ஆளுநர் யார்?

(A) சஞ்சய் மல்ஹோத்ரா
(B) பிமல் ஜலான்
(C) சக்தி காந்த தாஸ்
(D) ராஜா செல்லையா

19. எந்த இந்திய மாநிலத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது?

(A) கேரளம்
(B) ஹரியானா
(C) ராஜஸ்தான்
(D) கோவா

20. அரசியலமைப்பு நிர்ணய சபையில் முன்வைக்கப்பட்ட 'குறிக்கோள் தீர்மானம்' குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(A) டாக்டர் சச்சிதானந்த சின்கா 1946 டிசம்பர் 9 அன்று குறிக்கோள் தீர்மானத்தை முன்மொழிந்தார்

(B) ஜவஹர்லால் நேரு 1946 டிசம்பர் 13 அன்று குறிக்கோள் தீர்மானத்தை முன்மொழிந்தார்

(C) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் 1949 நவம்பர் 26 அன்று குறிக்கோள் தீர்மானத்தை முன்மொழிந்தார்

(D) டாக்டர் ராஜேந்திர பிரசாத் 1950 ஜனவரி 26 அன்று குறிக்கோள் தீர்மானத்தை முன்மொழிந்தார்

21. பின்வருவனவற்றுள் எது இந்தியக் கூட்டாட்சி முறையின் அம்சம் அல்ல?

(A) அரை-கூட்டாட்சி முறை

(B) ஈரவை சட்டமன்றம்

(C) அரசியலமைப்பின் மேலாதிக்கம்

(D) இரட்டைக் குடியுரிமை

22. சைபர் சட்டங்கள் பின்வருவனவற்றுள் எதன் கீழ் வருகின்றன?

(A) மத்தியப் பட்டியல்

(B) மாநிலப் பட்டியல்

(C) பொதுப் பட்டியல்

(D) எஞ்சிய அதிகாரங்கள்

23. பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(A) அமைச்சரால் அறிமுகப்படுத்தப்படும் மசோதா 'அரசு மசோதா' என்று அழைக்கப்படுகிறது

(B) நிதி மசோதாக்களை நிராகரிக்கும் அதிகாரம் மாநிலங்களவைக்கு உள்ளது

(C) நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் (வீட்டோ அதிகாரம்) குடியரசுத் தலைவருக்கு உள்ளது

(D) நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பிறகு சட்டமாகின்றன

24. குடியரசுத் தலைவர் தனது ராஜினாமா கடிதத்தை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டும்?

(A) துணைக்குடியரசுத் தலைவர்

(B) பிரதம மந்திரி

(C) உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி

(D) மக்களவை சபாநாயகர்

25. எந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்தியது?

(A) 42 (B) 73

(C) 101 (D) 86

26. இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதன்முதலில் எங்கு பயன்படுத்தப்பட்டன?

(A) கேரளாவில் உள்ள பரவூர் சட்டமன்றத் தொகுதி

(B) தமிழ்நாட்டில் உள்ள மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி

(C) மேற்கு வங்காளத்தில் உள்ள புருலியா சட்டமன்றத் தொகுதி

(D) அசாமில் உள்ள சில்சார் சட்டமன்றத் தொகுதி

**27.** மாநிலப் பொதுப் பணி ஆணையம் (State Public Service Commission) தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க :

(i) அரசியலமைப்பின் 315-வது பிரிவு ஒவ்வொரு மாநிலத்திற்கும் Public Service Commission இருக்க வேண்டும் என்று வகை செய்கிறது.

(ii) State Public Service Commission தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள்.

(iii) State Public Service Commission மாநிலக் குடிமைப் பணிகளுக்கான நியமனங்களுக்கான தேர்வுகளை நடத்துகிறது.

(iv) State Public Service Commission தலைவர் மற்றும் உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் மாநில ஆளுநருக்கு உள்ளது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எவை சரியானவை?

(A) (i), (ii), (iii) மட்டும் (B) (i), (iii), (iv) மட்டும்

(C) (ii), (iii), (iv) மட்டும் (D) (i), (ii), (iii), (iv)

**28.** MGNREGS திட்டம் தொடர்பாக 'தேவை சார்ந்த' என்ற சொல் எதைக் குறிக்கிறது?

(A) கிராமங்களில் வேலை கோருபவர்களுக்குச் சட்டப்படி வேலை வாய்ப்பை வழங்குவதற்கான ஏற்பாடு

(B) வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தேவைகளின் அடிப்படையில் அமைந்த பணி

(C) பஞ்சாயத்துத் தலைவரின் முடிவின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படும் பணி

(D) மத்திய அரசின் தேவைகளின் அடிப்படையில் மட்டுமே வேலை வழங்குதல்

**29.** 2026-27 ஆம் ஆண்டிற்கான கேரள பட்ஜெட்டின்படி, பள்ளி மாணவர்கள் உட்பட அனைவருக்கும் அறிவிக்கப்பட்ட புதிய திட்டம் எது?

(A) ஆரோக்ய கிரணம்

(B) அனைவருக்குமான ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீடு

(C) சுரக்ஷித கேரளம்

(D) ஜீவன் ரக்ஷா பத்ததி

**30.** மாநில சதுப்புநில ஆணையத்தின் (SWAK) ‘wise use’ கொள்கை எதைக் குறிக்கிறது?

(A) சதுப்பு நிலங்களை முழுமையாக அழித்தல்

(B) சூழல் மண்டலத்தின் செயல்பாட்டைப் பாதுகாத்துக்கொண்டே பயன்படுத்துதல்

(C) சதுப்புநிலங்களில் தொழிற்பேட்டைகளை அமைத்தல்

(D) சதுப்புநிலங்களைத் தனியார்மயமாக்குதல்

31. கேரள நிலச் சீர்திருத்தச் சட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும் :

(i) கேரள நிலச் சீர்திருத்தச் சட்டம் 1963-இல் நிறைவேற்றப்பட்டது.

(ii) நில உச்சவரம்பை (Land Ceiling) விதிப்பது இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

(iii) இச்சட்டம் குடிசைவாசிகளின் உரிமைகள் மற்றும் கடமைகளை வரையறுக்கிறது.

(iv) பெரிய நில உரிமையாளர்களின் நில உடைமைகளை அதிகரிப்பதும், விவசாயிகளிடையே நில உரிமையைக் குறைப்பதும் இச்சட்டத்தின் நோக்கமாகும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எவை சரியானவை?

(A) (i), (ii) மட்டும்
(B) (i), (ii), (iii), (iv)
(C) (ii), (iii), (iv) மட்டும்
(D) (i), (ii), (iii) மட்டும்

32. கேரள மாநில பொது தகவல் ஆணையம் (Kerala State Information Commission) எந்த ஆண்டு/தேதியில் நடைமுறைக்கு வந்தது?

(A) 2005 நவம்பர் 1
(B) 2006 ஜனவரி 26
(C) 2005 டிசம்பர் 19
(D) 2005 அக்டோபர் 12

33. கேரள மாநிலத் தேர்தல் ஆணையர் யார்?

(A) M.S. ஜோசப்
(B) N. மோகன்தாஸ்
(C) K. சசிதரன் நாயர்
(D) N. சேஷாத்ரிநாதன்

34. உயிரினங்களை அவற்றின் இயற்கையான வாழிடத்திற்கு வெளியே பாதுகாப்பதற்கான ஒரு எடுத்துக்காட்டு :

(i) ஜீன் பேங்குகள்

(ii) கம்யூனிட்டி ரிசர்வ்ஸ்

(iii) அக்வேரியம்

(iv) எகாலஜிகல் ஹாட்ஸ்பாட்ஸ்

(A) (i) & (ii)
(B) (ii) & (iv)
(C) (i) & (iii)
(D) (i) & (iv)

35. ஒரு தனிநபரின் நோய் எதிர்ப்பு மண்டலமே அந்த உடலைப் பாதிப்பதன் மூலம் ஏற்படும் நோய் நிலை:

(A) தசைச் சோர்வு
(B) ஆஸ்டியோபோரோசிஸ்
(C) தசைச் சிதைவு
(D) ரூமட்டாய்டு ஆர்த்ரைடிஸ்

36. பிறந்த குழந்தைகளுக்குப் பிறப்பின் போது வழங்கப்படும் முக்கியத் தடுப்பூசிகள் :

(i) BCG

(ii) OPV (ஜீரோ டோஸ்)

(iii) ஹெபடைடிஸ் B

(iv) OPV-1

(A) (i) & (ii) (B) (ii) & (iii)

(C) (iii) & (iv) (D) (i), (ii) & (iii)

37. மனித இரத்தம் குறித்த சில தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன; அவற்றில் எது சரியானது?

(i) A பிரிவு இரத்தத்தில் ஆன்டிஜென் A காணப்படுகிறது

(ii) Rh காரணியைக் கொண்ட இரத்தம் +ve இரத்தம் ஆகும்

(iii) AB பிரிவு இரத்தம் 'அனைவருக்கும் இரத்தம் அளிப்பவர்' என்று அழைக்கப்படுகிறது

(iv) B-பிரிவு இரத்தத்தில் ஆன்டிபாடி B காணப்படுகிறது

(A) (i) & (ii) (B) (ii) & (iii)

(C) (iii) & (iv) (D) (ii) & (iv)

38. துத்தநாகக் குறைபாட்டினால் உடலில் காணப்படும் அறிகுறிகள் :

(A) இரும்புச் சத்து உறிஞ்சப்படுதல் குறைதல்

(B) நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் மற்றும் முடி உதிர்தல்

(C) தசைச் செயல்பாடு மற்றும் எலும்பு ஆரோக்கியம் பாதிக்கப்படுதல்

(D) மேற்கூறிய அனைத்தும்

39. கால்சிஃபெரால் என்பது இவ்வாறு அழைக்கப்படுகிறது :

(A) வைட்டமின் A (B) வைட்டமின் B

(C) வைட்டமின் C (D) வைட்டமின் D

40. இந்தியாவின் முதல் சூரிய ஆற்றல் மூலம் இயங்கும் A.T.M. வாகனத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் :

(A) ராஜஸ்தான் (B) குஜராத்

(C) கர்நாடகா (D) ஆந்திரப் பிரதேசம்

41. தேர்தல் தொடர்பான செயல்பாடுகளை ஒருங்கிணைக்க உருவாக்கப்பட்ட தளம் :

(A) இ-எலக்டர் (B) ஒன் வோட்

(C) ஈஸிநெட் (D) இவற்றில் எதுவுமில்லை

42. பின்வரும் ஒலி அதிர்வெண்களில் மனிதர்களால் கேட்கக்கூடியது எது?

(A) 3 Hz
(B) 300 kHz
(C) 60 kHz
(D) 2000 Hz

43. ஒளிக்கதிர்கள் ஒரு கூழ்மக் கரைசலின் வழியாகச் செல்லும்போது, ஒளியின் பாதை புலப்படுகிறது. இந்நிகழ்வு :

(A) ஒளிவிலகல்
(B) டின்டால் விளைவு
(C) ஒளி எதிரொளிப்பு
(D) ஒலி எதிரொலி நீடிப்பு

44. பூமியில் ஒரு பொருளின் விடுபடு திசைவேகம்:

(A) பொருளின் நிறை அதிகரிக்கும்போது அதிகரிக்கிறது
(B) பொருளின் நிறை குறையும்போது அதிகரிக்கிறது
(C) பொருளின் நிறையைச் சார்ந்திருப்பதில்லை
(D) பூமியின் நிறையைச் சார்ந்திருப்பதில்லை

45. இஸ்ரோவின் உதவியுடன் ஏவப்பட்ட இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட் :

(A) விக்ரம்-எஸ்
(B) ஆர்.எல்.வி
(C) ஏரியன் ஸ்பேஸ்
(D) எல்.வி.எம்-3

46. 2025-ஆம் ஆண்டிற்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு எந்தக் கண்டுபிடிப்புக்காக வழங்கப்பட்டது?

(A) பொருட்களில் எலக்ட்ரான் இயக்கவியலை ஆய்வு செய்வதற்கான 'அட்டோசெகண்ட்' கால அளவு கொண்ட ஒளித் துடிப்புகளை உருவாக்கும் பரிசோதனை முறைகளுக்காக
(B) மின்சுற்றில் மேக்ரோஸ்கோபிக் குவாண்டம் இயந்திரவியல் டனலிங் மற்றும் ஆற்றல் குவாண்டமாக்கல் ஆகியவற்றைக் கண்டறிந்ததற்காக
(C) குவாண்டம் பிணைப்பு கொண்ட ஃபோட்டான்கள் தொடர்பான பரிசோதனைகள், 'பெல் சமனின்மை' மீறலை நிறுவுதல் மற்றும் குவாண்டம் தகவல் அறிவியலில் முன்னோடியாகத் திகழ்ந்தமைக்காக
(D) செயற்கை நரம்பியல் வலைப்பின்னல்கள் மூலம் இயந்திரக் கற்றலை சாத்தியமாக்கும் அடிப்படை கண்டுபிடிப்புகள் மற்றும் உருவாக்கங்களுக்காக

47. செமிகண்டக்டர் சிப்புகளை தயாரிக்கப் பயன்படும் உலோகப் போலி எது?

(A) செம்பு
(B) சிலிக்கான்
(C) சோடியம்
(D) கார்பன்

48. பின்வருவனவற்றுள் சரியான விடை எது?

Assertion (A) : ஆர்கானின் அணுத்தன்மை ஒன்று; ஓசோனின் அணுத்தன்மை மூன்று.

Reason (R) : ஆர்கான் ஓர் ஒற்றை அணு மூலக்கூறு; ஓசோன் ஒரு மூவணு மூலக்கூறு.

(A) (A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரி; மேலும் (R) என்பது (A)-க்கான சரியான விளக்கம்.

(B) (A) சரி, ஆனால் (R) தவறு.

(C) (A) தவறு, ஆனால் (R) சரி.

(D) (A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A)-க்கான சரியான விளக்கம் அல்ல.

49. பின்வருவனவற்றுள் எது ஒரு சீரற்ற கலவை (Heterogeneous) ஆகும்?

(A) மணல் மற்றும் நீர்
(B) சர்க்கரை கரைசல்
(C) காற்று
(D) பித்தளை

50. பின்வருவனவற்றுள் பொருளின் ஐந்தாவது நிலை எது?

(A) பிளாஸ்மா

(B) குவார்க்-குளுவன் பிளாஸ்மா

(C) போஸ்-ஐன்ஸ்டீன் கண்டன்சேட்

(D) கூழ்மம்

51. பின்வருவனவற்றுள் எது உண்மையான கரைசலின் பண்பு அல்ல?

(A) துகள்களின் அளவு 1 nm-க்கும் குறைவு

(B) டின்டால் விளைவைக் காட்டுகிறது

(C) வடிகட்டித் தாள் வழியாகச் செல்கிறது

(D) துகள்கள் அடியில் தங்குகின்றன

52. திருமிட்டக்கோடு பாலகிருஷ்ணன் எந்த நாவலில் வரும் கதாபாத்திரம்?

(A) தபோமாயியுடே அச்சன்
(B) பட்டுநூல்புழு
(C) மாதங்கலீலா
(D) மரணவம்சம்

**53.** மம்முட்டிக்குச் சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றுத்தந்த 'பிரமயுகம்' திரைப்படத்தின் இயக்குனர் யார்?

(A) டொமினிக் அருண்

(B) ராகுல் சதாசிவன்

(C) சிதம்பரம் எஸ். பொதுவாள்

(D) ஜூட் அந்தனி ஜோசப்

**54.** கோயில் நுழைவுப் பிரகடனத்தை வெளியிட்ட திருவிதாங்கூர் மன்னர் யார்?

(A) அனிழம் திருநாள் மார்த்தாண்ட வர்மா

(B) அவிட்டம் திருநாள் பாலராம வர்மா

(C) ஸ்ரீ சித்திரைத் திருநாள் பாலராம வர்மா

(D) கார்த்திகை திருநாள் ராம வர்மா

**55.** துரோணாச்சாரியார் விருதைப் பெற்ற முதல் மலையாளி யார்?

(A) ஓ.எம். நம்பியார்

(B) ராபர்ட் பாபி ஜார்ஜ்

(C) கே.பி. தாமஸ்

(D) பி. ராதாகிருஷ்ணன் நாயர்

**56.** "இடக்யூ கண்ணீருப்பு புரட்டா –
தென்தினு ஜீவிதா பலகாரம்"
- இவ்வரி யாருடையது?

(A) வயலார் ராமவர்மா

(B) ஓ.என்.வி. குருப்

(C) அக்கித்தம் அச்சுதன் நம்பூதிரி

(D) இடச்சேரி கோவிந்தன் நாயர்

**57.** கலாமண்டலம் ஹைதரலி எந்தக் கலையுடன் தொடர்புடையவர்?

(A) துள்ளல் (B) கூத்து

(C) கூடியாட்டம் (D) கதகளி

**58.** 2026-உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் வெற்றி பெற்ற ஸ்பெயின் அணி, ஒரே ஒரு கோலை மட்டுமே விட்டுக்கொடுத்தது. ஸ்பெயினுக்கு எதிராக கோல் அடித்த அணி எது?

(A) போர்ச்சுக்கல் (B) பிரான்ஸ்

(C) உருகுவே (D) பெல்ஜியம்

59. வித்தியாசமான ஒன்றைக் கண்டறியவும் :

(A) சேட் GPT
(B) ஜெமினய்
(C) க்ளோட்
(D) ஜாவா

60. ஒரு நெட்வொர்கின் பகுதியாக இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சாதனத்திற்கும் பயன்படுத்தப்படும் சொல் :

(A) கேட்வே
(B) ஃப்ரிட்ஜ்
(C) நோட் (Node)
(D) ரவுட்டர்

61. பின்வருவனவற்றுள் எது 'பாயிண்டிங்' இன்புட் உபகரணம் ஆகும்?

(A) வெப்கேம்
(B) ஜாய்ஸ்டிக்
(C) மைக்ரோபோன்
(D) ஸ்கேனர்

62. மீட்புத் தொகை செலுத்தப்படும் வரை கணினித் தரவு அல்லது கோப்புகளை முடக்கி வைத்திருக்கும் இணையத் தாக்குதல் ____________ என்று அழைக்கப்படுகிறது.

(A) ஃபிஷிங்
(B) ஐடன்டிடி தெப்ட்
(C) ரேசம்வேர்
(D) ஸ்பூஃபிங்

63. AI கருவிகளுக்கு வழங்கும் கட்டளை அல்லது கேள்வி __________ என்று அழைக்கப்படுகிறது.

(A) பிராம்ப்ட்
(B) டெக்ஸ்ட்
(C) கீ
(D) சர்ச் ஸ்டிரிங்

64. மாநிலத் தகவல் ஆணையராக நியமிக்கப்படுவதற்கான தகுதி வரம்புகளில் பின்வருவனவற்றுள் எது சேர்க்கப்படவில்லை?

(A) சட்டத் துறையில் நிபுணத்துவம்
(B) நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும்
(C) ஊதியம் பெறும் பணியாளராக இருக்கக்கூடாது
(D) அரசியல் கட்சியுடன் எந்தத் தொடர்பும் இருக்கக்கூடாது

65. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், ஒரு நுகர்வோர் முதலில் எந்த அமைப்பிடம் தனது வழக்கைப் பதிவு செய்ய வேண்டும்?

(A) மாவட்ட நீதிமன்றம்
(B) துணை நீதிமன்றம்
(C) மாவட்ட நுகர்வோர் குறைதீர்ப்பாயம்
(D) உயர் நீதிமன்றம்

66. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட பின்வருபவர்களில் யாருக்குத் தகுதி உள்ளது?

(A) மாவட்ட நீதிபதி

(B) உயர் நீதிமன்ற நீதிபதி

(C) குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்

(D) உச்ச நீதிமன்ற நீதிபதி

67. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 தொடர்பான பின்வரும் இரண்டு கூற்றுகளை ஆய்வு செய்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1. 'துன்புறுத்தல்' என்பதற்கான வரையறையில் பொருளாதார ரீதியான துன்புறுத்தலும் அடங்கும்.

2. குடும்ப வன்முறை தொடர்பான புகாரில் நிதி இழப்பீடு வழங்குவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படலாம்.

(A) கூற்றுகள் 1 மற்றும் 2 சரியானவை

(B) கூற்றுகள் 1 மற்றும் 2 தவறானவை

(C) கூற்று 1 மட்டுமே சரியானது

(D) கூற்று 2 மட்டுமே சரியானது

68. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (POCSO)-இன் கீழ், 'குழந்தை' என்பது எந்த வயதுக்குட்பட்ட நபர் என வரையறுக்கப்படுகிறது?

(A) 21 (B) 16

(C) 18 (D) 15

69. ‘SIR’ என்ற சொல்லின் முழு வடிவம் என்ன?

(A) ஸ்பெஷல் இந்தியன் ரிஜிஸ்டர்

(B) ஸ்பெஷல் இன்டன்ஷிவ் ரிவிஷன்

(C) ஸ்டேட் இன்டர்னல் ரிவிவ்

(D) சிஸ்டமேடிக் இன்வஸ்டிகேஷன் ரிபோர்ட்

70. சந்தோஷ் கோப்பை தேசிய கால்பந்து போட்டி குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(A) 2025-26 சந்தோஷ் கோப்பை இறுதிப் போட்டியில் கேரளா 'சர்வீசஸ்' அணியிடம் தோல்வியடைந்தது

(B) 2025-26 சந்தோஷ் கோப்பை இறுதிப் போட்டி கேரளாவில் நடைபெற்றது

(C) கேரளா தனது வரலாற்றில் ஒருபோதும் சந்தோஷ் கோப்பையை வென்றதில்லை

(D) அசாம் 2025-26 சந்தோஷ் கோப்பையை வென்றது

71. அடுத்தடுத்த 2 எண்களின் வர்க்கங்களுக்கு இடையிலான வித்தியாசம் 15 எனில், அந்த எண்கள் யாவை?

(A) 5, 6
(B) 6, 7
(C) 7, 8
(D) 8, 9

72. A ஒரு வேலையை 10 நாட்களில் முடிக்கிறார், B அதே வேலையை 15 நாட்களில் முடிக்கிறார். A மற்றும் B இருவரும் இணைந்து அதே வேலையை முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

(A) 5 நாட்கள்
(B) 6 நாட்கள்
(C) 7 நாட்கள்
(D) 8 நாட்கள்

73. அடுத்த எண் என்ன?

1, 2, 11, 38, _____

(A) 99
(B) 100
(C) 102
(D) 64

74. 30 மாணவர்கள் கொண்ட வகுப்பின் சராசரி வயது 15 ஆகும். ஆசிரியரின் வயதையும் சேர்த்தால், சராசரி 16 ஆக மாறுகிறது. ஆசிரியரின் வயது என்ன?

(A) 40
(B) 46
(C) 50
(D) 35

75. 2, 4, 6, 8, .... 100 வரை உள்ள இரட்டை எண்களின் கூடுதல் என்ன?

(A) 1000
(B) 5050
(C) 1275
(D) 1500

76. 12, 15, 18 ஆகிய எண்களால் வகுக்கும்போது 3-ஐ மீதியாகத் தரும் மிகச்சிறிய எண் எது?

(A) 180
(B) 120
(C) 123
(D) 183

77. இக்குழுவில் சேராத எண் எது?

28, 30, 32, 36, 40

(A) 20
(B) 30
(C) 36
(D) 40

78. ஒருவரின் சம்பளம் 5% உயர்ந்த பிறகு ரூ. 8,505 ஆக மாறியது. அவரது அசல் சம்பளம் என்ன?

(A) 8,000
(B) 8,100
(C) 7,500
(D) 7,000

79. கடிகாரத்தில் நேரம் 12.20 ஆக இருந்தால், அதன் பிம்பத்தில் தெரியும் நேரம் என்ன?

(A) 11.20
(B) 11.40
(C) 11.10
(D) 11.50

80. ஒரு வரிசையில் ஒருவர் முன்னால் இருந்து 15-வது இடத்திலும், பின்னால் இருந்து 10-வது இடத்திலும் இருந்தால், அந்த வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

(A) 25
(B) 23
(C) 30
(D) 24

81. Choose the correct form of the verb :
He _________ in the same bus when the accident took place.

(A) travelled
(B) has been travelling
(C) was travelling
(D) is travelling

82. Fill in the blank using the right preposition :
He was accused ___________ theft.

(A) to
(B) of
(C) on
(D) with

83. Choose the correct option to complete the sentence :
If I knew his address

(A) I wrote to him
(B) I will write to him
(C) I had written to him
(D) I would write to him

84. Fill in the blank with suitable question tag :
We sell antiques here, ___________?

(A) doesn't we?
(B) don't we?
(C) didn't we?
(D) do we?

85. Change into passive voice :
A peddler has stolen my books.

(A) My books have been stolen
(B) My books are stolen
(C) My books has been stolen
(D) My books had been stolen

86. Choose the appropriate phrasal verb to complete the sentence :
They decided to ____________ the trip because of rain.

(A) put on
(B) put off
(C) put out
(D) put up with

87. Which among the following is an antonym of the word conceal?

(A) Hide
(B) Reveal
(C) Cover
(D) Secrete

88. A large group of bees is called :

(A) team
(B) swarm
(C) bunch
(D) troop

89. A person who hates mankind is called :

(A) Philanthropist
(B) Misanthropist
(C) Misogamist
(D) Anthropologist

90. The company closure announcement hit the staff like a bolt from the blue. In this sentence a bolt from the blue stands for :

(A) a pleasant surprise
(B) an expected event
(C) a sudden shocking and unexpected piece of news
(D) a happy piece of news

91. இலை : இலைகள், தழை : ____________.

(A) துளிகள் (B) தழைகள்
(C) குடிசைகள் (D) குடில்கள்

92. முட் + செடி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் :

(A) முள்செடி (B) மூர்ச்செடி
(C) முற்செடி (D) முட்செடி

93. பரிவு, கருணை, அருள் எனப் பொருள் தரும் சொல்லை எழுதுக.

(A) இரக்கம் (B) உறக்கம்
(C) இரகசியம் (D) இறுக்கம்

94. 'எளிது' என்னும் சொல்லின் எதிர்ச்சொல்லை கண்டறிக.

(A) சிறிது (B) பெரிது
(C) அரிது (D) வறிது

95. "அரக்கப் பறக்க" - இம்மரபுத் தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

(A) தொடங்குதல் (B) பின்பற்றுதல்
(C) மறைவாக (D) விரைவாக

96. "Video Conference" – என்பதன் தமிழாக்கம் :

(A) காணொலிக் கூட்டம் (B) கூட்டம்
(C) வழிபாட்டுக் கூட்டம் (D) பதிவிறக்கம்

97. ஒருமை பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) அவர்கள் சான்றோர்கள் அல்ல (B) அவர்கள் சான்றோர்கள் அல்லர்
(C) அவர்கள் சான்றோர்கள் அன்று (D) அவர்கள் சான்றோர்கள் அல்லன்

98. "நீரிடை உறங்கும் சங்கம்; நிழலிடை உறங்கும் மேதி;
தாரிடை உறங்கும் வண்டு; தாமரை உறங்கும் செய்யாள்;
தூரிடை உறங்கும் ஆமை; துறையிடை உறங்கும் இப்பி;
போரிடை உறங்கும் அன்னம்; பொழிலிடை உறங்கும் தோகை"

– இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'மேதி' என்ற சொல்லின் பொருளை எழுதுக.

(A) தேனீ (B) ஆமை
(C) எருமை (D) சிப்பி

99. பின்வருவனவற்றுள் தனித்து நிற்பது எது?

(A) ஐயமே அறிவின் திறவுகோல்.
(B) பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்.
(C) ஆறின கஞ்சி பழங்கஞ்சிதான்.
(D) உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார் ஆவார்.

100. 'வன்றனி' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) வன் + தனி (B) வன் + றனி
(C) வல் + தனி (D) வன்மை + தனி

SPACE FOR ROUGH WORK

**SPACE FOR ROUGH WORK**